தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக

# செய்தி மடல்

செய்தி 17 மடல் 4 ஏப்ரல் – 2017 ₹1.00

### இந்தியப் பல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தேசியத் தர வரிசையில் 38ஆவது இடம் மற்றும் மாநில அளவில் 4ஆவது இடம்



இந்திய அளவில் பல்கலைக்கழகங்களுக்கான தேசியத் தரவரிசை ஆய்வு மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் கடந்த 2016இல் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் கற்பித்தல், கல்வி கற்றலுக்கான சூழல்கள் மற்றும் வளங்கள் மற்றும் தொழில்நுட்ப முறைகள், பட்டமளித்தல் பலன், விரிவாக்கச் செயல்பாடுகள் மற்றும் பிறர் கணிப்பு போன்ற ஐந்து முக்கிய அளவீடுகளை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுக்கு வேண்டிய தரவுகளைப் பதிவேற்றம் செய்யும்படி நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களும் கேட்டுக்கொள்ளப்பட்டன. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் வேண்டிய தரவுகளைப் பதிவேற்றம் செய்து, தேசியத் தர வரிசை ஆய்வில் பங்கேற்றது. தேசியத் தர வரிசை ஆய்வின் முடிவுகள் மாண்புமிகு மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சர் திரு. பிரகாஷ் ஜவடேகர் அவர்களால் 03.04.2017அன்று புதுதில்லி, விக்யான் பவனில் வெளியிடப்பட்டது. பல்கலைக்கழகங்களுக்கான மதிப்பீட்டில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தேசிய அளவில் 38ஆவது இடத்தையும் மாநில அளவில் 4ஆவது இடத்தையும் பெற்று முதல் 50 பல்கலைக்கழகப் பட்டியலில் இடம்பிடித்துப் பெருமை சேர்த்துள்ளது. இதுமட்டுமன்றி இப்பல்கலைக்கழகம் கற்பித்தல் மற்றும் கல்வி கற்றலுக்கான சூழல்களை வழங்கிடும் பிரிவில் தேசிய அளவில் 6ஆவது இடத்தையும் மாநில அளவில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது.

மேலும், தேசிய வேளாண் ஆராய்ச்சிப் பணிகளை உள்ளடக்கிய 72 மாநில அளவிலான வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளப் பல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 4ஆம் இடத்தையும் பெற்றுள்ளது. சிறப்பாக இந்தியாவில் உள்ள மொத்தம் 12 கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தேசிய அளவில் முதல் இடத்தைப் பெற்று பெருமை சேர்த்துள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் இந்தத் தரவரிசை முறை, பல்கலைக்கழகத்தின் சிறப்புகளையும், மேலும் நாம் அடைய வேண்டிய முன்னேற்றங்கள் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு மிக்க பயனுள்ளதாக உள்ளது என்றும், இனிவரும் ஆண்டுகளில் முதல் 25 பல்கலைக்கழகங்கள் பட்டியலில் இடம்பெறுவதற்கான செயல்பாடுகளையும் கடின உழைப்பையும் பல்கலைக்கழகம் முன்னெடுக்கும் என்றும் தெரிவித்தார்கள்.

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிய கட்டடத்தைத் திறந்துவைத்தார்கள்

2900 சதுர அடியுடன் ரூபாய் 28.88 இலட்சத்தில் கட்டப்பட்ட கிருஷ்ணகிரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி



மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கான புதிய கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 07.03.2017அன்று காணொலிக் காட்சிமூலம் திறந்துவைத்தார்கள். புதிய கட்டடத்தில் பயிற்சிக் கூடம், ஆராய்ச்சிக் கூடம், வரவேற்புக் கூடம் மற்றும் அலுவலகம் மற்றும் ஆசிரியர்க்கான அறைகள் இடம்பெற்றுள்ளன.

### இந்தியக் கால்நடை மருத்துவக் கழகத்தின் உறுப்பினராகப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நியமனம்

மத்திய அரசின் வேளாண் அமைச்சகத்தின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையால் 17.03.2017அன்று வெளியிட்ட அரசிதழ் அறிவிக்கையின் பிரிவு 3இல் துணைப் பிரிவு (3)இன் உட்கூறு 9(பி)இன்படி மத்திய அரசின் இந்தியக் கால்நடை மருத்துவக் கழகத்தின் உறுப்பினராகப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

## பயிலரங்கு



கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத் தளம் மூலம் தமிழ்நாடு அரசின் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் நிதியுதவியில் “உயிர்த் தொழில்நுட்பத் தொழில்முனைதலுக்கான வாய்ப்புகள்” குறித்த இரு நாள் பயிலரங்கு, 07.03.2017 மற்றும் 08.03.2017ஆம் நாள்களில் நடைபெற்றது. பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்களின் உயிர்த் தொழில்நுட்பப் புலப் பேராசிரியர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் என 50 பேர் பயிலரங்கில் பங்கேற்றனர். பயிலரங்கில் இந்தியாவில் வேகமாக வளர்ந்துவரும் உயிர்த் தொழில்நுட்பத் தொழில்முனைதல் சூழல், வாய்ப்புகள் மற்றும் நிதியுதவிகள், சவால்கள், உயிர்த்தொழில்நுட்பப் பொறிப்பகத்தின் பங்கு மற்றும் உயிர்த் தொழில்நுட்பக் காப்புரிமைக்கான அறிவுசார் சொத்துரிமை குறித்த உரைகள் இடம்பெற்றன. மேலும், கல்வி நிலையங்களில் உயிர்த் தொழில்நுட்பத் தொழில்முனைதலுக்கான வழிகாட்டல் குறித்த குழு விவாதம் இடம்பெற்றது. 08.03.2017அன்று நடைபெற்ற பயிலரங்கின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர் மற்றும் முதன்மைச் செயலர் திரு. க. ராஜாராமன் இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றுப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினர்.

## 26ஆவது ஆராய்ச்சிக் குழுக் கூட்டம்




பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநரகம்மூலம் பல்கலைக்கழகத்தின் 26ஆவது ஆராய்ச்சிக் குழுக் கூட்டம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 10.03.2017அன்று நடத்தப்பட்டது. கூட்டத்திற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் தலைமையேற்றார். ஹைதராபாத், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கோழியின ஆராய்ச்சி இயக்குநரகத்தின் திட்ட இயக்குநர் முனைவர் ஆர்.என். சாட்டர்ஜி, ஓய்வுபெற்ற ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் கே.எஸ். பழனிச்சாமி, தமிழக அரசின் கால்நடை அபிவிருத்தி முகமையின் முதன்மைச் செயல் அலுவலர் டாக்டர் ஆர். விஸ்வநாதன் ஆகியோர் சிறப்பு வல்லுநர்களாகக் கூட்டத்தில் பங்கேற்றனர். துணைவேந்தர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், வேளாண் அறிவியல் நிலையங்கள், உழவர் பயிற்சி மையங்கள் மற்றும் பண்ணைகள் ஆகியவற்றின் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர். ஆராய்ச்சிக் குழு உறுப்பினர் செயலர் மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள், முந்தைய ஆராய்ச்சிக் குழுக் கூட்டப் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களைத் தெரிவித்ததோடு பல்கலைக்கழக அறிவியலறிஞர்களின் ஆராய்ச்சிப் பங்களிப்பினையும் விவரித்தார். 2016ஆம் ஆண்டில், ரூ.35.03 கோடி நிதியுதவியில் பல்கலைக்கழகம் பெற்ற 34 புதிய ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பற்றியும் விவரித்தார். 2016ஆம் ஆண்டு பெறப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஐந்து ஆராய்ச்சித் திட்டங்களின் முதன்மை ஆராய்ச்சியாளர்கள் தங்களது திட்டங்களின் நிலைகளை விளக்கினர். மேலும், 2016இல் முடிவுற்ற எட்டுத் திட்டங்களின் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள் சுவரொட்டிகளாக வைக்கப்பட்டிருந்தன. பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வரும் 73 அரசுத் திட்டங்களை 2017–18ஆம் ஆண்டிலும் தொடர இந்த ஆராய்ச்சிக் கூட்டத்தின் ஒப்புதல் வேண்டப்பட்டது. குழு பரிந்துரைக்கு ஒப்புதலும் அளித்தது. பல்கலைக்கழகத்தின் எதிர்கால ஆராய்ச்சித் திட்டங்களை மேம்படுத்த ஆராய்ச்சிக் குழுவின் உறுப்பினர்கள், அறிஞர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆகியோர் வழங்கிய ஆலோசனைகளுடன் ஆராய்ச்சிக் குழுக் கூட்டம் முடிவுற்றது.

## 28ஆவது விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்டம்



பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககம்மூலம் 28ஆவது விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்டம் 28.03.2017அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள், எளிதில் கற்றுக்கொள்ள ஏதுவாகக் கதை வடிவில் படங்கள்மூலம் விளக்கப்பட்ட “நாட்டுக்கோழி வளர்ப்பின் நன்மைகள்”, “இலாபகரமான ஆடு வளர்ப்பு”, “கோடை மற்றும் வறட்சிக் காலங்களில் கால்நடைக்கான மாற்றுத் தீவனங்கள்” ஆகிய மூன்று புத்தகங்களையும், “கால்நடை வளர்ப்பு” குறித்த கேட்பொலிக் குறுந்தகடையும் வெளியிட்டுக் கருத்துரை வழங்கினார். விரிவாக்கக் கல்வி இயக்குநர் மற்றும் விரிவாக்கக் கல்விக் குழுவின் உறுப்பினர் செயலர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் 27ஆவது விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள் மற்றும் 2016ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட விரிவாக்கப் பணிகள் குறித்து அறிக்கை அளித்தார். பெங்களூரு, மண்டலம் 8, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் வேளாண் தொழில்நுட்பப் பயன்பாட்டு ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை அறிவியலாளர் (வேளாண் விரிவாக்கம்) டாக்டர் எம்.ஜெ. சந்த்ரே கௌடா, நியமனம் செய்யப்பட்ட பண்ணையாளர்கள், விரிவாக்கக் கல்விக் குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக அதிகாரிகள், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், வேளாண் அறிவியல் நிலையங்கள் மற்றும் உழவர் பயிற்சி மையங்கள், ஆராய்ச்சி நிலையங்களின் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்று

ஆலோசனை வழங்கினர். முன்னதாக, தஞ்சாவூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ந. புண்ணியமூர்த்தி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கோயம்புத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே. சிவக்குமார் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

### டாக்டர் ஏ. சீனிவாசன் நினைவு விரிவுரை



பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநரகம்மூலம் டாக்டர் ஏ. சீனிவாசன் நினைவு விரிவுரை, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 24.03.2017அன்று நடைபெற்றது. சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியின் கதிரியக்க முறை நோய் கண்டறிதல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் மருத்துவர் ஜெ. தேவி மீனாள் அவர்கள் 'மருத்துவத்தில் கம்ப்யூட்டட் டோமோகிராஃபி பயன்பாட்டின் முன்னேற்றங்கள்' குறித்து விரிவுரை ஆற்றினார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று, டாக்டர் ஏ. சீனிவாசன் அவர்களின் கொடையுள்ள வாழ்வை நினைவுகூர்ந்தார். துணைவேந்தர் அவர்கள் தமது உரையில் டாக்டர் ஏ. சீனிவாசன் நினைவு நிதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 1.20இலட்சம், பல்கலைக்கழக மருத்துவமனைகளில் நோயுற்ற கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கும் மருந்துகள் வாங்கச் செலவிடப்படுகின்றது என்று குறிப்பிட்டார். சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் இரா. ஜெயபிரகாஷ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

### கல்லூரி, விளையாட்டு, விடுதி நாள் விழா மற்றும் முத்தமிழ் விழா




சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கல்லூரி நாள் மற்றும் விளையாட்டு நாள் விழா 18.03.2017அன்று கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றினார். தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் டாக்டர் என். சுப்பையன் இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, கல்லூரி ஆண்டு மலர் வெளியிட்டார். மேலும், கல்வியில் சிறப்பிடம் பெற்ற மாணவர்கள், கலைநிகழ்ச்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கை–2015–2016 அளித்தார். கல்லூரி மலரின் ஆசிரியர் முனைவர் எஸ்.எம்.கே. கார்த்திகேயன் அவர்கள் கல்லூரி மலர் குறித்து எடுத்துரைத்தார். கல்லூரியின் மாணவர் சங்கத் துணைத் தலைவர் முனைவர் எஸ்.என். சிவசெல்வம் அவர்கள் கலைநிகழ்ச்சி–பேகாசஸ்'16 குறித்துப் பேசினார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். விளையாட்டுப் போட்டிச் செயலாளர் முனைவர் ஏ. சங்கரன் அவர்கள் விளையாட்டு–2015–16 அறிக்கை அளித்தார். முன்னதாக, இறுதியாண்டு மாணவர் செல்வன் பி. நவீன் முருகானந்தன் வரவேற்புரை ஆற்றினார். இறுதியாக, இறுதியாண்டு மாணவர் செல்வன் வி. சிவக்குமார் நன்றியுரை ஆற்றினார்.

கல்லூரியின் விடுதி நாள் விழா மற்றும் முத்தமிழ் விழா "**செம்புலம்**'16" 19.03.2017அன்று கொண்டாடப்பட்டது. விழாவில்




பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கலைமகள் கழகத்தின் 'அந்திமழை–2017' இதழை வெளியிட்டு, மாணவர்களிடையே உரையாற்றினார். தமிழ்நாடு நீர்வடிநில மேம்பாட்டு முகமையின் செயல் இயக்குநர் மருத்துவர் ஆர். ஆனந்தகுமார் இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலைமகள் கழகப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கி,



மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் உரையாற்றினார். மேலும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழக வளர்ச்சி நிதி 2016–17இன்கீழ் கல்லூரி விடுதி வளாகத்தில் ஏற்படுத்தப்பட்ட சுகாதர மையம் மற்றும் உள் விளையாட்டரங்க விளையாட்டு அறையைச் சிறப்பு விருந்தினர் மற்றும் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆகியோர் திறந்துவைத்தனர். பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பெரு. மதியழகன், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் விடுதிக் காப்பாளர் முனைவர் டி.ஏ. கண்ணன் அவர்கள் விடுதி அறிக்கை–2016 அளித்தார். இறுதியாண்டு விடுதி மாணவர்களின் பிரதிநிதி செல்வன் வி. விஜயராமநாத் வரவேற்புரை ஆற்றினார். கலைமகள் கழகத்தின் மாணவர் செயலாளர் செல்வி ஆர்.ஐ. ரோஜா கலைமகள் கழகம் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். இறுதியாண்டு மாணவி செல்வி கே. சரண்யா நன்றியுரை ஆற்றினார்.

## வேளாண் அறிவியல் நிலையங்களின் செயல்திட்டக் கூட்டம்



பெங்களூரு, வேளாண் தொழில்நுட்பப் பயன்பாட்டு ஆராய்ச்சி நிலையம்மூலம் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள வேளாண் அறிவியல் நிலையங்களுக்கான ஆண்டு செயல்திட்டக் கூட்டம் 2017–18, 16.03.2017 முதல் 18.03.2017 வரை நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்து, தமது தொடக்கவுரையில் அந்தந்த பகுதிகளில் காணப்படும் வேளாண் மற்றும் கால்நடை வளர்ப்பு பிரச்சனைகளைவேளாண் அறிவியல் நிலையங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பெங்களூரு மற்றும் ஐதராபாத் வேளாண் தொழில்நுட்பப் பயன்பாட்டு ஆராய்ச்சி நிலையங்களின் இயக்குநர்கள் முனைவர் ஸ்ரீநாத் தீட்சித் மற்றும் முனைவர் ஒய்.ஜி. பிரசாத் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்று, பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ஹெச். பிலிப், பெங்களூரு, வேளாண் தொழில்நுட்பப் பயன்பாட்டு ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை அறிவியலாளர் டாக்டர் எம்.ஜெ. சந்த்ரே கௌடா, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் வல்லுநர்கள் ஆகியோருடன் இணைந்து நிகழ்ச்சியை நடத்தினர். 29 வேளாண் அறிவியல் நிலையங்களின் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் 2017–18ஆம் ஆண்டிற்கான தங்களின் செயல் திட்டங்களைச் சமர்ப்பித்தனர். செயல் திட்டங்களை வல்லுநர்கள் ஆய்வுசெய்து இறுதிசெய்தனர்.

## பல்கலைக்கழகச் சமுதாய வானொலி நிலையம் துவக்கம்



நாமக்கல், வேளாண் அறிவியல் நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள “பல்கலைக்கழகச் சமுதாய வானொலி நிலையம்–91.2”, பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் மற்றும் ஐதராபாத், வேளாண் தொழில்நுட்பப் பயன்பாட்டு ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் முனைவர் ஒய்.ஜி. பிரசாத் ஆகியோரால் 16.03.2017அன்று துவக்கிவைக்கப்பட்டது. பெங்களூரு, வேளாண் தொழில்நுட்பப் பயன்பாட்டு ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் முனைவர் ஸ்ரீநாத் தீட்சித், பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் இல. குணசீலன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ஹெச். பிலிப், பெங்களூரு, வேளாண் தொழில்நுட்பப் பயன்பாட்டு ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை அறிவியலாளர் டாக்டர் எம்.ஜெ. சந்த்ரே கௌடா ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## வளாக நேர்முகத் தேர்வு 2017

ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் 2013–14ஆம் ஆண்டு பி.டெக்.(கோழியினத் தொழில்நுட்பம்) பட்டப் படிப்பு மாணவர்களுக்கு வளாக நேர்முகத் தேர்வு 20.03.2017முதல் 23.03.2017வரை நடத்தப்பட்டது. நேர்முகத் தேர்வில் பெங்களூரு சி.பி. பீட்ஸ், ஒசூர் வெங்கடேஸ்வரா ஹேச்சரிஸ், பெங்களூரு லோட்டஸ் பார்ம்ஸ், கோயம்புத்தூர் சாந்தி பீட்ஸ் பிரைவேட் லிமிடெட், கிருஷ்ணகிரி விர்பேக் அனிமல் ஹெல்த் கேர் பிரைவேட் லிமிடெட், பிக் டச்சுமேன் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று மாணவர்களைத் தேர்வுசெய்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைப் பேராசிரியர் முனைவர் பே. சம்சுதீன் அவர்கள் செய்தார்.

## மகளிர் விடுதிக்கான அடிக்கல் நாட்டு விழா



இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக மேம்பாட்டுத் திட்ட நிதியில் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூபாய் 2 கோடியில் 11,500 சதுர அடியில் மகளிர் விடுதி கட்டப்பட உள்ளது. யமுனா மகளிர் விடுதி என்ற பெயர்கொண்ட இந்த விடுதிக்கான அடிக்கல்லைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 16.03.2017அன்று நாட்டினார்.

## கால்நடைப் பேரிடர் அவசர நடவடிக்கைகள் குறித்த பயிற்சி

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பேரிடர் அவசர உதவிக் குழுவும், புதுதில்லி உலகக் கால்நடைப் பாதுகாப்பு அமைப்பும் இணைந்து “கால்நடைப் பேரிடர் அவசர நடவடிக்கைகள்” குறித்த பயிற்சியைக் கல்லூரியில் 24.03.2017முதல் 27.03.2017வரை நடத்தின. பயிற்சியில் கல்லூரியின் இளநிலைப் பட்ட நான்காமாண்டு மாணவர்கள்(2013–14ஆம் ஆண்டு) 84 பேர் பங்கேற்று, விரிவுரைகள் மற்றும் செய்முறைப் பயிற்சி உள்ளிட்ட 14 மாதிரிகள் குறித்துப் பயிற்சி பெற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி, நிறைவுரை ஆற்றினார். ஒருங்கிணைப்பாளர் மற்றும் பேராசிரியர் முனைவர் சி. மணிவண்ணன் அவர்கள் கால்நடைப் பேரிடர் அவசர உதவிக் குழுவின் அறிக்கை அளித்தார். முன்னதாக, கால்நடைப் பேரிடர் அவசர உதவிக் குழுவின் இணை ஒருங்கிணைப்பாளர் முனைவர் எம். பாலகங்காதர திலகர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இணை ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஏ. யசோதா அவர்கள் நன்றி கூறினார்.

## செயல்திறன் பயிற்சி

புதுதில்லி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் நிதியுதவியிலான “கறவை மாடு வளர்ப்பில் புதுமையான அறிவியல் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் தமிழ்நாட்டின் வேலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களின் கிராமப்புறத்தில் உள்ள நலிந்த பிரிவினரின் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துதல்” என்ற திட்டத்தின் பயனாளிகளுக்கு, வேலூர் மாவட்டத்தின் வரதாரெட்டிப்பள்ளி கிராமம் மற்றும் கடலூர் மாவட்டத்தின் இலங்கியனூர் கிராமத்தில் 27.03.2017 முதல் 30.03.2017 வரை

"குறைந்த செலவில் அடர்தீவனம் தயாரித்தல்" மற்றும் "அசோலா சாகுபடி" பற்றிய செயல்திறன் பயிற்சி அளிக்கப்பட்டது.

## விழிப்புணர்வு நிகழ்ச்சி

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் திருநெல்வேலி நபார்டு வங்கியும் இணைந்து "திருநெல்வேலி மாவட்டத்தில் தனுவாஸ் தாதுப்புக் கட்டிமூலம் கறவை மாடுகளில் பால் உற்பத்தியை அதிகப்படுத்தல்" திட்டத்தின்கீழ் "தனுவாஸ் தாதுப்புக் கட்டி" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் திருநெல்வேலி மாவட்டத்தின் பூலங்குளம், தென்பத்து, துலுக்கர்குளம் மற்றும் சிவந்திபட்டி கிராமங்களில் முறையே 02.03.2017, 08.03.2017, 16.03.2017 மற்றும் 23.03.2017ஆம் நாள்களில் நடத்தின. கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். மொத்தம் 25 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வகத்தில் செயல்படும் வேளாண் வானிலை ஆலோசனை மையத்தின் சார்பில் 07.03.2017, 15.03.2017 ஆகிய நாள்களில் முறையே நாமக்கல் மாவட்டம், கிலாக்குட்டை கிராமத்திலும் தர்மபுரி மாவட்டம், மோலையனூர் கிராமத்திலும் "வானிலை சார்ந்த வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் மொத்தம் 110 விவசாயிகள் பங்கேற்றனர். வேளாண் வானிலை ஆலோசனை மையத்தின் ஒருங்கிணைப்பாளர், பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அ. நடராசன் அவர்கள் வானிலை சார்ந்த கால்நடை மேலாண்மை குறித்து உரையாற்றினார். கோயமுத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் பன்னீர்செல்வம், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் ஷர்மிளா பாரதி, தர்மபுரி வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் எம். சங்கீதா ஆகியோர் வானிலை சார்ந்த வேளாண்மைச் செயல்பாடுகள் குறித்து விரிவுரையாற்றினர்.

## கோழி வளர்ப்புத் தொழில்புரிவோர் சந்திப்புக் கூட்டம்

முட்டைக் கோழி வளர்ப்புத் தொழிலின் தற்போதைய நிலைமை குறித்து விவாதிப்பதற்கு அத்தொழில்புரிவோர் சந்திப்புக் கூட்டம், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வகத்தால் 08.03.2017அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் கூட்டத்தைத் துவக்கிவைத்தார். மொத்தம் 19 கோழி வளர்ப்புத் தொழில்புரிவோர் பங்கேற்றனர். தர உறுதி ஆய்வகத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அ. நடராசன் அவர்கள் கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

## சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு முகாம்

காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம்மூலம் பல்கலைக்கழகத்தின் கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின் கீழ் தத்தெடுக்கப்பட்ட சாஸ்திரம்பாக்கம் கிராமத்தில் 23.03.2017அன்று பள்ளி மாணவர்களுக்கான பல் மற்றும் வாய்ச் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. பல் மருத்துவர் வெ. விஜயராஜேஸ்வரி அவர்கள் பல் பராமரிப்பு மற்றும் பல் தேய்க்கும் முறைகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். நிகழ்ச்சியில் 60 பள்ளி மாணவர்கள் (34 பெண் மற்றும் 26 ஆண் குழந்தைகள்) பங்கேற்றனர்.

## உலகக் காசநோய் தினம்



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்நிகழ்வாய்வியல் துறைமூலம் டாக்டர் ராபர்ட் கோச் அவர்கள் 1882இல் காசநோயைக் கண்டறிந்ததை நினைவுகூரும் வகையில் "உலகக் காசநோய் தினம்" 24.03.2017அன்று கொண்டாடப்பட்டது. "ஒருங்கிணைந்து காசநோயை ஒழித்தல்" என்பது உலகக் காசநோய் தினத்தின் மையப்பொருளாகக் கொள்ளப்பட்டது. பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ. இளங்கோ அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, கட்டுரை மற்றும் வினாடிவினாப் போட்டிகளில் வெற்றிபெற்ற இளநிலைப் பட்ட மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். இணைப் பேராசிரியர் முனைவர் ஜி. செல்வராஜு அவர்கள் நன்றி கூறினார்.

## தடுப்புமருந்து அளித்தல் முகாம்

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் பல்கலைக்கழகத்தின் கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டம், துலுக்கர்குளம் கிராமத்தில் "வெள்ளைக் கழிச்சல் நோய்க்கு எதிராக நாட்டுக்கோழிகளுக்கு வாய்வழிக் குருணைத் தடுப்பு மருந்து அளித்தல் மற்றும் அகத்தி நாற்றுகள் வழங்கல்" முகாம் 16.03.2017அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். மொத்தம் 223 நாட்டுக்கோழிகளுக்குத் தடுப்பு மருந்து அளிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு 108 அகத்தி நாற்றுகள் வழங்கப்பட்டன.

## இலவச மருத்துவ முகாம்

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மற்றும் மருத்துவப் பராமரிப்பு விரிவாக்க கல்வித் துறையும், மும்பையில் உள்ள தேசிய இனப்பெருக்கச் சுகாதார ஆராய்ச்சிக் கழகமும் இணைந்து கடலூர் மாவட்டத்தின் இலங்கியனூர், வலசை மற்றும் பிஞ்சனூர் கிராமங்களின் தாழ்த்தப்பட்ட சமூக மகளிர்க்காக 20.03.2017 முதல் 22.03.2017 வரை தூய்மை மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரத்தைக் கண்காணித்தல் குறித்த இலவச மருத்துவ முகாமை நடத்தின. முகாம்மூலம் மொத்தம் 600 தாழ்த்தப்பட்ட மகளிர் பயனடைந்தனர்.

## மாவட்ட ஆட்சியர் பார்வையிடல்



'வேலூர் மாவட்டத்தில் மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் கால்நடைப் பசுந்தீவனம் உற்பத்தி செய்தல்' என்ற திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டம், கீழ்வீதி கிராமத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பசுந்தீவன உற்பத்திப் பிரிவை வேலூர்

மாவட்ட ஆட்சியர் திரு. எஸ்.ஏ. ராமன் அவர்கள் 22.03.2017அன்று பார்வையிட்டார். வேலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ச. சரஸ்வதி, உதவிப் பேராசிரியர் முனைவர் பா. ராஜேஷ் குமார் ஆகியோர் திட்டத்தின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சியரிடம் விளக்கினர்.

### குளிரூட்டப்பட்ட பேருந்து துவக்கம்

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூபாய் 27.58 இலட்ச மதிப்பில் குளிரூட்டப்பட்ட பேருந்து வாங்கப்பட்டுள்ளது. பேருந்தைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 16.03.2017அன்று கொடியசைத்துத் துவக்கிவைத்தார்.

### நவீனப் பன்றி வளர்ப்புக்கூடம் திறப்பு



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் “நவீனப் பன்றி இனப்பெருக்கப் பண்ணை நிறுவுதல்” என்ற தேசியக் கால்நடை இயக்கத் திட்டத்தின்கீழ் ரூ. 38.20 இலட்ச மதிப்பீட்டில் தானியங்கி தீவனம் மற்றும் தண்ணீர் அளிக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட பெண்பன்றிக் கொட்டில்கள், ஆண் மற்றும் வளர்பன்றி அறைகள், குட்டி ஈனும் கூண்டுகள் மற்றும் இளங்குட்டி அறைகளுடன் கட்டப்பபட்ட நவீனப் பன்றி வளர்ப்புக்கூடத்தைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 28.03.2017அன்று திறந்துவைத்தார். நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் க. ந. செல்வக்குமார், பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பெரு. மதியழகன், ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

### புதிய கட்டடம் திறப்பு




சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நாய்கள் மற்றும் பூனைகளுக்குச் சிகிச்சை அளிக்கும் வகையில் தனியே புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்தைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 31.03.2017அன்று திறந்துவைத்தார். நிகழ்ச்சியில் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயபிரகாஷ், கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன், பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்கள் உடனிருந்தனர்.

### மண்ணில்லாப் பசுந்தீவன உற்பத்திப் பிரிவுத் துவக்கம்

புதுக்கோட்டை, பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் மாவட்ட ஆட்சியரின் நிதியுதவியில் மாதிரி மண்ணில்லாப் பசுந்தீவன உற்பத்திப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இப் பிரிவைப் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திரு. சு. கணேஷ் இ.ஆ.ப., அவர்கள்



23.03.2017அன்று துவக்கிவைத்தார். பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் மண்ணில்லாப் பசுந்தீவன உற்பத்தித் தொழில்நுட்பம் குறித்து விளக்கினார். மண்டல ஆராய்ச்சி மையப் பேராசிரியர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### யூனியன் பாங்க் ஆப் இந்தியா நன்கொடை அளிப்பு




யூனியன் பாங்க் ஆப் இந்தியாவின் சமூக அறக்கட்டளையானது நோயுற்ற கால்நடைகளை மருத்துவமனைக்குக் கொண்டுவருவதற்கான கால்நடை அவசர ஊர்தி வாங்க ரூபாய் 6.06 இலட்சம் நன்கொடையைச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறைக்கு வழங்கியது. சென்னை, யூனியன் பாங்க் ஆப் இந்தியாவின் மண்டல அலுவலகத்தில் 03.03.2017அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் யூனியன் பாங்க் ஆப் இந்தியாவின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. அருண் திவாரி அவர்கள் அவசர ஊர்தியை வழங்கினார். பொது மேலாளர் திரு. வி.பி. உஷாரியா, இணைப் பொது மேலாளர் திரு. சுதன் ராவ் மற்றும் யூனியன் பாங்க் ஆப் இந்தியாவின் அலுவலர்கள், சிகிச்சைத் துறைப் பேராசிரியர்கள் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### பல்கலைக்கழகத்தின் முதன்மையான நிகழ்வுகள்

| | |
|---|---|
| 13.03.2017 | : கல்விக் குழுக் கூட்டம் |
| 24.03.2017 | : பல்கலைக்கழக அதிகாரிகள் கூட்டம் |
| 28.03.2017 | : மரபுசார் கால்நடை மருத்துவ ஆய்வுக் கூட்டம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், தஞ்சாவூர் |

### 286ஆவது தேர்வுக் குழுக் கூட்டம்

பல்கலைக்கழத்தின் தலைமை நிலையத்திலிருந்து காணொலிக் காட்சிமூலம் 286ஆவது தேர்வுக் குழுக் கூட்டம் 08.03.2017அன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். பல்கலைக்கழகத்தின் கல்லூரிகளின்

முதல்வர்கள், அடிப்படை அறிவியல் புல முதல்வர் மற்றும் தொலைநிலைக் கல்வி இயக்குநர் ஆகியோருடன் காணொலிக்



காட்சிமூலம் தொடர்புபடுத்தப்பட்டு, கூட்டம் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் உறுப்பினர் செயலர் முனைவர் பெரு. மதியழகன், பல்கலைக்கழகத்தின் தேர்வாணையர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

### விருது

- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 31.03.2017முதல் 02.04.2017வரை நடைபெற்ற தொழிற்கல்விக் கல்லூரிகளுக்கான கைப்பந்துப் போட்டியில் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு மாணவர் டி. சங்கர் (பிவிஎன் 13058) சிறந்த தடுப்பு ஆட்டக்காரர் விருது பெற்றார்.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் 31.03.2017 முதல் 02.04.2017 வரை நடைபெற்ற தொழிற்கல்விக் கல்லூரிகளுக்கான கைப்பந்துப் போட்டியில் பங்கேற்றுச் சிறந்த அணிக்கான விருது பெற்றது.

### மகளிர் தின விழா

மாதவரம் பால்பண்ணை வளாகத்தில் உள்ள பல்கலைக்கழகத்தின் தலைமை நிலையத்தில் உலக மகளிர் தினம் 08.03.2017அன்று கொண்டாடப்பட்டது. விழாவில் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பெரு. மதியழகன் அவர்கள் ''மகளிர் மேம்பாடு'' குறித்து உரையாற்றினார். பல்கலைக்கழகத்தின் 20 மகளிர் பணியாளர்கள் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். விழாவின் நிறைவாகக் கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. மொத்தம் 190 மகளிர் பணியாளர்கள் விழாவில் பங்கேற்றனர். பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் கல்லூரிகளிலும் மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது.

### கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகத்திற்கு அங்கீகாரம்

பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக்கல்வி மையத்தின் கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகமானது அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை மற்றும் 'ஏபிடா'வின் ஆதரவுடன் செயல்படும் தேசிய ஆய்வகமாகும். இந்த ஆய்வகம், சோதனை மற்றும் அளவுத்திருத்த ஆராய்ச்சிக் கூடத்திற்கான தேசிய அங்கீகாரக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, வேதியியல் பரிசோதனைக்கான அங்கீகாரம் 31.03.2017முதல் 30.03.2019வரை ஐஎஸ்ஓ/ஐஇசி 17025:2005க்கு ஏற்பக் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்தியாவிலேயே முதன் முறையாக அதிகச் செயல்திறன் கொண்ட மெல்லிய அடுக்கு வண்ணப்படத்தின் மூலம் பூஞ்சை நச்சு கண்டறியப்படும் முறைக்கு அங்கீகாரத்தினைப் பெற்ற முதல் ஆய்வகமாக இது இருப்பதால், கால்நடைத் தீவனம் மற்றும் வேளாண் பொருட்களில் உள்ள பூஞ்சை நச்சுகளைக் கண்டறிவதற்கான அங்கீகாரம் பெற்ற முதல் பல்கலைக்கழகம் என்ற பெருமை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்குக் கிடைத்துள்ளது. இதன்மூலம் இந்த ஆய்வகம் கால்நடைகள், விவசாயிகள் மற்றும் கால்நடைத் தொழில்முனைவோர்களுக்கு உதவுவதில் பெரும்பங்கினை வகிக்கும்.

### நாட்டு நலப்பணித் திட்டப் பணிகள்

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டு நலப்பணித் திட்டப் பிரிவுமூலம் தத்தெடுக்கப்பட்ட காரைக்குறிச்சி கிராமத்தில் ''சுற்றுச்சூழல் மற்றும் தனி மனிதச் சுகாதாரம்'' என்ற கருத்தை முதன்மைப்படுத்திச் சிறப்பு முகாம் 23.03.2017முதல்



29.03.2017வரை நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் 27.03.2017அன்று முகாமில் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றினார். மொத்தம் 166 விவசாயிகள் பயன்பெற்றனர்.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டு நலப்பணித் திட்டப் பிரிவுமூலம் சிறப்பு முகாம் நெடுவாக்கோட்டை கிராமத்தில் 20.03.2017முதல் 26.03.2017வரை நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர்



க.ந. செல்வக்குமார் அவர்கள் 21.03.2017அன்று பல் மருத்துவ முகாமை துவக்கிவைத்தார்.
- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டப் பிரிவுமூலம் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களான சிவன்வயல், பந்திகாவனூர் மற்றும் கரையான்மேட்டில் சிறப்பு முகாம் 07.03.2017முதல் 13.03.2017வரை நடைபெற்றது. முகாமில் 58 நாட்டு நலப்பணித் திட்டத் தன்னார்வலர்கள் மற்றும் மூன்று திட்ட அலுவலர்கள் பங்கேற்றனர்.
- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டு நலப்பணித் திட்டப் பிரிவுமூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் ஒன்றான காளக்குடியில் சிறப்பு முகாம் 22.03.2017முதல் 28.03.2017வரை நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் நிறைவு விழாவில் பங்கேற்று, தனுவாஸ் தாதுப்புக் கலவையை விவசாயிகளுக்கும், மாணவ தன்னார்வலர்களுக்குச் சான்றிதழும் வழங்கினார்.

**Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254**
**Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.**

**Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17**
**Registration No.TN/TBM/32/2015-17**

Posted on 29.04.2017 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051

**Editor : Dr. S.A. Asokan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

## பணி ஓய்வு



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயபிரகாஷ் அவர்கள் 31.03.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 13.03.1957இல் பிறந்த இவர் மொத்தம் 34 ஆண்டும் 08 மாதமும் பணியாற்றியுள்ளார்.



தஞ்சாவூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ந. புண்ணியமூர்த்தி அவர்கள் 31.03.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 06.03.1957இல் பிறந்த இவர் மொத்தம் 37 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் மருந்தியல் மற்றும் நச்சியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே.வி. வெங்கடேஸ்வரன் அவர்கள் 31.03.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 12.03.1957இல் பிறந்த இவர் மொத்தம் 36 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் அலுலகத்தின் தட்டச்சர் (நிலை 1) திருமதி எம். தங்கம்மாள் அவர்கள் 31.03.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 06.03.1959இல் பிறந்த இவர் மொத்தம் 26 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



திருச்சிராப்பள்ளி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் ஓட்டுநர் (சிறப்பு நிலை) திரு. பஷிர் அகமது அவர்கள் 31.03.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 07.03.1959இல் பிறந்த இவர் மொத்தம் 32 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் அலுவலகத்தின் உடனாள் (சிறப்பு நிலை) திரு. வி. கடும்பாடி அவர்கள் 31.03.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 29.03.1959இல் பிறந்த இவர் மொத்தம் 36 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் (இறைச்சி அறிவியல்) துறையின் உடனாள் திரு. கே. நடராசன் அவர்கள் 31.03.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 06.03.1959இல் பிறந்த இவர் மொத்தம் 24 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஊட்டச்சத்தியல் துறையின் பணியாளர் திரு. கே. தட்சணாமூர்த்தி அவர்கள் 31.03.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 19.03.1957இல் பிறந்த இவர் மொத்தம் 21 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## இரங்கல் செய்தி



கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சியின் முன்னாள் இயக்குநர் மற்றும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் வைத்திலிங்கம் ரத்தினசபாபதி அவர்கள் 06.04.2017அன்று அமெரிக்காவில் இயற்கை எய்தினார். 1945இல் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் இளநிலைப் பட்டம் பெற்று, இசாட் நகர் இந்தியக் கால்நடை ஆராய்ச்சிக் கழகத்தில் தன் பணியைத் தொடங்கிய இவர், அமெரிக்காவின் மிஸௌரி பல்கலைக்கழகத்தில் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் மரபியலில் முனைவர் பட்டம் பெற்றார். பின்னர் மாநில அரசின் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி, கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநராக 1977வரை பணியாற்றினார். இயக்குநர் பொறுப்பில் இருந்தபோது வியக்கத்தக்க மாற்றங்களைக் கொண்டுவந்தார். இவரின் தொலைநோக்குப் பார்வை, நிர்வாகத் திறமை ஆகியன கால்நடை மருத்துவ அறிவியல் புலத்தில் பன்முக முன்னேற்றங்களுக்கு வித்திட்டு, நாட்டின் கால்நடை மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தன. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்ட இவர், 1989இல் ஏற்படுத்தப்பட்ட இப் பல்கலைக்கழகத்தின் செயல்திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்தார். கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் புலத்தில் இவரின் நிபுணத்துவம் மற்றும் அனுபவத்திற்கு ஏராளமான சவால்களும் சோதனைகளும் இருந்தன. முனைவர் வைத்திலிங்கம் ரத்தினசபாபதி அவர்கள் சென்னை வரும்போதெல்லாம் அவர் பயின்ற கல்லூரிக்கு வந்து, பல்கலைக்கழகப் பேராசிரியர்களுடன் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சு. திலகர், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் ச.அ. அசோகன்
தொலைநிலைக்கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் க. குலசேகர்
முனைவர் ஜி. சரத்சந்திரா
முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்
முனைவர் சி. மணிவண்ணன்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் அ. மணிவண்ணன்
முனைவர் பா. மதுகேஸ்வரன்